## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்த முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்த முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1985 இன் 3 ஆம் இலக்க முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக விதப்புரையின் 19 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கு அறிக்கைகளை பேணிச்செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் அல்லாத ரூபா 14,729,762 அந்நிய செலாவணி இலாபம் காசு உட்பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றை சரிசெய்து 2023 ஆம் ஆண்டின் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கிரயம் ரூபா 45,671,870 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் | சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பயன்படுத்தப்படுகிறது. அதன் பிரகாரம் மதீப்பீடு செய்யபட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 3,850,000 ஆன வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டுக்குரிய கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 4,050,000 சரியானதாகும். அந்தப் பணம் பாடநெறி நிறுத்தப்பட்ட செயற்பாடற்ற தொகுதிக்கு உரித்தான 15 மாணவர்களுக்குரியதனால் கணக்கீடு செய்யப்படவில்லை. | ஆண்டுக்குரிய பாடநெறி வருமானங்கள் உரிய பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துத் தொகுதிகள் மூன்றுக்குரிய மீளாய்வாண்டிக்கான பெறுமானத் தேய்வு ரூபா 422,543 குறைத்து கணிப்பிடப்பட்டதன் காரணமாக ஆண்டின் இலாபம் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமதி அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறிகள் மற்றும் இயந்திரங்களின் பெறுமானத் தேய்வு செய்யும் போது ஏற்பட்ட குறைவான ஏற்பாடு 2023 ஆம் ஆண்டின் போது பிற்போட்ட ரீதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் பெறுமதி சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுக்குரிய மீளச் செலுத்தப்பட்ட ரூபா 1,500,000 பாடநெறிக்கட்டண வருமானம் பொது ஒதுக்கக் கணக்கில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானக் கணக்கில் | EMBA 2021 பாடநெறிக் கட்டணங்களில் மீளச் செலுத்தப்பட்ட ரூபா 1,500,000 தொகை பிற்போட்ட ரீதியில் சீராக்கி கணக்கு அறிக்கை மீண்டும் வெளியிடுவதற்கு 2023 ஆம் | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 131,375 ஆன குறைவான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வு பற்றாக்குறை பிற்போட்டரீதியல் சீராக்கி 2023 ஆம் ஆண்டில் மீண்டும் வெளியிடப்படும். | சரியாக பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படுதல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **விடயம்** | **நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** | **நேரொத்த அறிக்கையின் பெறுமதி** | **வேறுபாடு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| (அ) | பாடநெறி வருமானம் | | | | பெறுமதிகளின் மாற்றங்களில் சீராக்கம் தேவையாயின் அதற்கான நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் போது எடுக்கப்படும்.<br>இந்தப் பாடநெறி வருமானம் சம்பத் வங்கியிலிருந்து கிடைத்த அறிக்கையின்படி நாளாந்த அந்நிய செலாவணி விகிதத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந் ததுடன் கணக்காய்வின் போது மாதாந்த | உரிய பட்டோலைகளின் பெறுமதிகளும், நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகளும் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விகிதத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டமை யால் ரூபா 4,081,690 வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | |
| | உள்நாட்டு | 262,038,303 | 246,129,783 | 19,990,520 | | |
| | வெளிநாட்டு | 21,870,340 | 25,952,030 | 4,081,690 | | |
| (ஆ) | வெளியிடப்பட்ட இருப்புக்கள் | 8,003,661 | 5,642,226 | 2,361,435 | 2023 இன் போது பிற்போட்ட ரீதியல் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான இருப்புப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஒக்டோர் 26 ஆம் திகதிய இலக்கம் 2/2020 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய இலக்கம் DMS/0011/PIM என்ற முகாமைத்துவ சேவை திணைக்கள கடிதம் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்காமல் நிறுவனத்தால் முகாமைத்துவ விரிவுரையாளர் பதவிகள் 04 மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ விரிவுரையாளர் பதவிகள் 06 இற்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதிய நிதி சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. பொதுத் துறையின் நிறுவனங்களுக்காக ''அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு'' ஆட்சேர்த்தல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகும். இதில் ''அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்'' என்ற நிரந்தர பதவியணியினருக்கு உரிய பதவியொன்றாக இருந்ததுடன் முகாமைத்துவ சபை அங்கீகரித்துள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2022 யூன் 10 ஆம் திகதிய இலக்கம் 03/2022 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிறுவன சுற்றறிக்கை | ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய விண்ணப்பங்கள் மீண்டும் அறிவிக்கும் வரை சமர்ப்பிக்க முடியாதிருந்ததாக சுற்றறிக்கையில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கை திகதியின் பின்னரும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் நீடிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2022 மே 25 ஆம் திகதிய இலக்கம் 03/2022 சுற்றறிக்கை ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு பல்கலைக்கழக முறைமையில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கும் போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கடிதம் தாக்கம் ஏற்படுத்துகின்றமையால் வெளியிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 160,203,167 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 97,956,285 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 62,246,882 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நிறுவகத்தின் பாடநெறி வருமானம், நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட வருமானம் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் பிரதி நிதியாளர் பதவிக்காக நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரந்தர நிதியாளர் இருவர் 2022 மே | நிரந்தர பதவியணியினரில் பிரதி நிதியாளர் பதவி ஒன்று மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதிவரை அந்தப் பதவியின் பணிகள் பல்கலைக்கழக முறைமையில் சிரேஷ்ட நிதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளை விஞ்சி ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளாதிருத்தல் |

முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த பிரதி நிதியாளருக்கு 2022 மே மாத முதல் திசெம்பர் வரை ரூபா 1,818,960 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.

உத்தியோத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்த உத்தியோகத்தரின் அனுபவம், நிறுவகத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துதல் மற்றும் பல்வகைப்படுத்தல்களினால் ஓய்வுபெற்ற அந்த உத்தியோகத்தரின் சேவையை தொடர்ந்தும் பெற்றுக்கொள்வது பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற பிரதி நிதியாளரின் கடமை நடவடிக்கைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக எந்தவொரு நலனுக்கும் உரித்து வழங்கப்படவில்லை.

வேண்டும்.